# சமுதாய அறிஞர் பெருமக்கள் இறை உணர்வு பெறுவார்களா?

முஸ்லிம் சமுதாயம் இன்று மிகமிக ஆபத்தான ஒரு காலகட்டத்தில் இருக்கிறது. இவ்வுலகிலும் எவ்வித சிறப்பும் இல்லை. ஏற்றமும் இல்லை. அழிவின் அதலபாதாளத்தில் வீழ்ந்து கிடக்கிறது என்று சொல்லலாம். மறுமையைப் பொருத்தமட்டிலும் நரக நெருப்புக் குழியின் விளிம்பில் இருப்பதாகவே சொல்ல முடியும். குஜராத், பாலஸ்தீன் மற்றும் பல பகுதிகளில் இன்று அரங்கேறி வரும் சோக நிகழ்ச்சிகள் மனிதநேயம் படைத்த மக்களின் கண்களில் இரத்தக் கண்ணீரை சிந்தச் செய்கிறது. முஸ்லிம் சமுதாயத்தை இந்த அளவுக்கு அல்லாஹ் ஏன் கடுமையான சோதனைகளைக் கொண்டு வாட்டி எடுக்கிறான் என்ற எண்ணமே மேலோங்கி நிற்கிறது.

ஆயினும் அல்லாஹ் ஆதில் - மிகப்பெரும் நீதியாளன். அவன் தரப்பிலிருந்து யாருக்கும் எந்த சமுதாயத்திற்கும் அநீதி அணுவளவும் இழைக்கப்படாது என்பது மிகமிக உறுதி. அப்படியானால் இன்று முஸ்லிம் சமுதாயம் அனுபவித்து வரும் மிகப்பெரும் இன்னல்களுக்கும், துன்பங்களுக்கும், இழப்புகளுக்கும் முழுக்க முழுக்க பொறுப்பு முஸ்லிம் சமுதாயமே. ஆனால் முஸ்லிம் சமுதாய அறிஞர்களோ எய்தவன் இருக்க அம்பை நோவதுபோல், தங்களின் அறிவையும், ஆற்றலையும் வீணான காரியங்களில் வீணாக்கிக் கொண்டிருக்கின்றனர். தாங்கள் அவசியம் கண்டிப்பாகக் கடைபிடிக்க வேண்டிய உறுப்படியான காரியத்தைவிட்டு, உறுப்படி இல்லாத வீணான காரியங்களில் ஈடுபடுகின்றனர். முஸ்லிம்களையும் ஈடுபடுத்துகின்றனர். அவர்களின் இந்தச் செயல்பாடுகள் முஸ்லிம் சமுதாயத்திற்கு மேலும் மேலும் அழிவையும், நாசத்தையும் ஏற்படுத்துமே அல்லாமல் சுபீட்சத்தை ஒரு போதும் தராது. அது மட்டுமல்ல; அல்லாஹ்வின் கடுமையான கோபத்திற்கும் சாபத்திற்கும் இந்த சமுதாயம் ஆளாகுமே அல்லாமல் அல்லாஹ்வின் நேசத்தையும், பொருத்தத்தையும் ஒரு போதும் பெற முடியாது.

எனவே முஸ்லிம் அறிஞர்கள் இந்த இடத்தில் நிதானமாக தங்களின் மனோ இச்சைகளுக்கு இடம் கொடாமல் நடுநிலையோடு எதார்த்த நிலைகளை ஆராய வேண்டும்.

படைத்துப் போஷித்துப் பாதுகாத்து வரும் ஒரு வல்லமைமிக்க சக்தி அல்லாஹ் ஒருவன் இருப்பதை முஸ்லிம்கள் உறுதியாக நம்புகிறார்கள். அவனது கட்டளைப்படியே முஸ்லிம்கள் நடக்க வேண்டும் என்பதிலும் மாற்றுக் கருத்து இருக்க முடியாது. அல்லாஹ்வின் கட்டளைக்கு முற்றிலும் அடிபணிந்து நடப்பவர்களே முஸ்லிம்கள். அல்குர்ஆன் அல்லாஹ்வின் வாக்கு(கலாம்) - இறுதி வேதம் - உலகம் அழியும்வரை அதுவே வேதம் என்பதிலும் முஸ்லிம்களுக்கு மாற்றுக் கருத்து இருக்க முடியாது. அல்குர்ஆனின் கட்டளைகளைப் புறக்கணிப்பது அல்லாஹ்வையே புறக்கணிப்பதாகும் என்பதையும் எந்த முஸ்லிம் அறிஞரும் மறுக்கமாட்டார். முஸ்லிம்கள் அல்குர்ஆனைப் பற்றிப்பிடித்து அதன் போதனைப்படி நடக்க ஆரம்பித்துவிட்டால் முஸ்லிம்கள் ஒன்றுபட்டு விடுவார்கள் என்பதையும் முஸ்லிம்களில் யாரும் மறுக்க முடியாது. விஷயம் இவ்வளவு தெளிவாக இருக்க - இரவும் பகலைப் போல் வெள்ளைவெளேர் என்று இருக்க முஸ்லிம்களுக்கு ஏன் இந்த தடுமாற்றம்? முஸ்லிம் அறிஞர்கள் எங்கே தங்களின் அறிவை தொலைத்தார்கள்? யாரிடம் தொலைத்தார்கள்?

அல்குர்ஆன் 3:103 வசனம் அல்லாஹ்வின் கயிறான அல்குர்ஆனைப்பற்றிப் பிடிக்கச் சொல்கிறது. 4:59 வசனம் கருத்து வேறுபாடு வந்தால் குர்ஆன், ஹதீஸ் இரண்டை மட்டும் கொண்டு கருத்து வேறுபாடுகளை

க் களையச் சொல்கிறது. கருத்து வேறுபாடுகளைக் களைவதற்கென்றே வேதங்கள் - இறுதிவேதம் அல்குர்ஆன் இறக்கப்பட்டதாக 2:213 குர்ஆன் வசனம் கூறுகிறது. முஸ்லிம் அறிஞர்கள் அனைவருமே இந்த 3:103, 4:59, 2:213 அல்லாஹ்வின் நேரடிக் கட்டளைகளுக்கு முற்றிலும் கட்டுப்பட்டு அடிபணிந்துவிட்டால் மலைபோன்ற பிரச்சனையும் பனிபோல் கரைந்து விடாதா? முஸ்லிம்களிடையே ஒற்றுமை ஏற்பட்டு விடாதா? ஆக முஸ்லிம்களிடையே ஒற்றுமை ஏற்படாமல் இருப்பதற்கு முழுமுதல் காரணம் முஸ்லிம் அறிஞர்கள் அல்குர்ஆனைப் பற்றிப்பிடிக்க முன் வராததே. முஸ்லிம் அறிஞர்களிடையேயுள்ள போட்டி பொறாமையே. இதையும் 2:213 வசனம் உறுதியாகச் சுட்டிக் காட்டுகிறது. ஒற்றுமை என்னும் கயிறு, ஒற்றுமை என்னும் கயிறு என்று இல்லாத ஒரு கயிறை இந்த அறிஞர்கள் அறிமுகப்படுத்திக் கொண்டிருந்தால் ஒற்றுமை எப்படி ஏற்படும்? ஒற்றுமை என்னும் கயிறு என்றால் அது என்ன? ஒற்றுமை என்னும் கயிறு எங்கே கிடைக்கிறது? ஒற்றுமை என்னும் கயிறு கிலோ என்ன விலை? என்பதையாவது இந்த அறிஞர்கள் அறியத்தருவார்களா? இல்லாத ஊருக்கு வழி சொல்வது போல் இந்த அறிஞர்கள் ஒற்றுமை என்னும் கயிறைப் பற்றிப்பிடிக்க வற்புறுத்தி கோரஸ் பாடுகிறார்களே. இது யாரை ஏமாற்ற?

முஸ்லிம் சமுதாயத்தில் இந்த அறிஞர்களுக்கு உண்மையிலேயே அக்கறை இருந்தால், அதன் இவ்வுலக முன்னேற்றத்திலும், மறுமையின் வெற்றியிலும் ஈடுபாடு இருந்தால், அவர்களை அல்லாஹ்வின் இறுதி வேதமான அல்குர்ஆனைப்பற்றிப் பிடிக்க ஏன் உபதேசம் செய்யக் கூடாது? அல்குர்ஆனின்மீது இந்த அறிஞர்களுக்கு ஏன் இந்த அளவு வெறுப்பு? அல்லாஹ்வின் கலாமான அல்குர்ஆனைப் புறக்கணித்துவிட்டு மனிதக் கரங்களால் அவர்களது கற்பனைகளுடன் கலந்து எழுதப்பட்ட நூல்களை ஏன் மக்களுக்கு அறிமுகப்படுத்துகிறார்கள்.

அல்குர்ஆன் மக்களுக்கு விளங்காது என்று ஏன் பூச்சாண்டி காட்டுகிறார்கள்? படைத்த இறைவனே **"ஹுதன் லின்னாஸ்"** -

மனித வர்க்கத்திற்கே நேர்வழி காட்டக் கூடியது என்று அட்பட்டமாக மிகத் தெளிவாக அறிவித்திருக்கும் போது, இந்த அறிஞர்கள் குர்ஆனை மக்களுக்கு விளங்காது என்று மக்களை ஏமாற்றுவது பெருத்த மோசடி இல்லையா?

அல்லாஹ்வின் இறுதி வேதமான அல்குர்ஆனை விளங்குவதற்கு இந்த அறிஞர்கள் போடும் நிபந்தனைகளில் ஒரேயொரு நிபந்தனையையாவது இவர்கள் அல்குர்ஆனிலிருந்தோ, ஹதீஸிலிருந்தோ காட்ட முடியுமா? இவர்களின் இந்த நிபந்தனைகளை மனித அறிவு சரி காண்கிறதே அல்லாமல் அல்குர்ஆன் சரி காண்கிறதா? அல்லது நபி வழி சரி காண்கிறதா? மனித அறிவு சரி கண்டு குர்ஆன், ஹதீஸ் சரி காணவில்லை என்றால் அந்த நிபந்தனைகளின் தரம் என்ன? நிலை என்ன? இதோ கேளுங்கள்:

......... அல்லாஹ்வின் தூதர்(ஸல்) அவர்கள் உரைமேடையின்(மிம்பர்)மீது நின்று (உரை நிகழ்த்தலானார்கள்:)

"மக்கள் சிலருக்கு என்ன நேர்ந்து விட்டது? இறைச் சட்டத்தில் இல்லாத நிபந்தனைகளை விதிக்கிறார்களே! எவர் இறைச்சட்டத்தில் இல்லாத நிபந்தனைகளை விதிக்கின்றாரோ அவருக்கு

அதற்கான (அதை நிறைவேற்றக்கோரும்) உரிமை இல்லை; அவர் நூறு முறை நிபந்தனை விதித்தாலும் சரியே!" என்று கூறினார்கள்....... (ஆயிஷா(ரழி) புகாரீ2735)

"........ இறைச்சட்டத்திற்கு மாற்றமான நிபந்தனைகள் அனைத்தும் செல்லாதவையாகும்; நூறு முறை நிபந்தனைகள் விதித்தாலும் சரியே!" என்று இப்னு உமர் (ரழி) அவர்கள் அல்லது உமர்(ரழி) அவர்கள் (இருவரில் எவரோ ஒருவர்) கூறினார்கள்....... புகாரீ.

............... அல்லாஹ்வின் தூதர் மக்களிடையே (உரையாற்ற) எழுந்து நின்று, அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தி, அவனைப்புகழ்ந்துரைத்துவிட்டு, சில மனிதர்களுக்கு என்ன நேர்ந்து விட்டது? அல்லாஹ்வின் சட்டத்தில் இல்லாத நிபந்தனைகளையெல்லாம் விதிக்கின்றார்களே! அல்லாஹ்வின் சட்டத்தில் இல்லாத நிபந்தனை எதுவாயினும் அது செல்லாததாகும். அவர்கள் நூறுமுறை நிபந்தனையிட்டாலும் சரியே. அல்லாஹ்வின் தீர்ப்பே பின்பற்றத்தக்கதாகும். அல்லாஹ்வின் நிபந்தனையே உறுதியானதும்(கட்டுப்படுத்தக் கூடியதும்) ஆகும். ........(ஆயிஷா(ரழி) புகாரீ2729)

அல்குர்ஆன் கூறும் அரிய உபதேசங்களை அறிந்து கொள்ள அரபி மொழி கற்றிருக்க வேண்டும். அதிலும் 14கலைகள் கற்றிருக்க வேண்டும் என்றெல்லாம் இந்த அறிஞர்கள் கூறுவது இந்த அறிஞர்களின் குறை அறிவில் பட்டவைதானே? உதித்தவைதானே? இந்த நிபந்தனைகளில் ஒன்றிற்காவது இவர்களால் குர்ஆனிலிருந்தோ ஹதீஸிலிருந்தோ ஆதாரம் தரமுடியுமா? ஷைத்தான் மனித அறிவில் இந்த மனித நிபந்தனைகள் சரியானவை, நியாயமானவை என்று போடுகிறானே அல்லாமல் குர்ஆன், ஹதீஸ் ஆதாரம் இருக்கிறதா? அப்படியானல் மேலே கண்ட ஹதீஸின்படி அவை அனைத்தும் தள்ளுபடியானவைகளே. மார்க்க அறிஞர்கள் 42:21 குர்ஆன் வசனத்தை ஓதி இறை உணர்வு பெறுவார்களாக.

நபி(ஸல்) அவர்களது காலத்தில் பெரும், பெரும் மேதைகளான அறிஞர்களான, நாதாக்களான "தாருந்நத்வா" உலமாக்கள் நபிஸல் அவர்கள் அல்லாஹ்வின் புறத்திலிருந்து இறக்கப்பட்ட அல்குர்ஆனை ஓதிக்காட்டும்போது, எழுதப்படிக்கத்தெரியாத இந்த முஹம்மது நம் முன்னோர்கள், மூதாதையர்களான நாதாக்களை விடவா தெரிந்து கொண்டார் என்று கூறி அல்குர்ஆனைப் புறக்கணித்தனர். அதன் விளைவு அவர்கள் இருந்த இடம் தெரியாமல் அழிக்கப்பட்டனர். அந்த அவல நிலை இந்த அறிஞர்களுக்கு ஏற்பட வேண்டாம் என எச்சரிக்கிறோம்.

ஜுன் 2002 அந்நஜாத்